# நோக்கு

சகல வாழ்வின் எழுச்சிப் பயனாளிக் குடும்பத்திற்கும் நிலையான ஒரு வீடு

# பணி

வாழ்வின் எழுச்சி குடும்பங்களுக்கிடையில் வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு ஒன்றினை மாதாந்தம் செயற்படுத்தி பேணிச் சென்று அக்குடுபங்களின் பொருட்டு நிலையான வீடொன்றிற்கான உரித்தினை வழங்குதல், வீடொன்றினைக் கட்டிக் கொள்வதற்கு காணி ஒன்றினைக் கொள்வனவை செய்வதும் அவர்களை பொருளாதார, சமூக, கல்வி, மற்றும் கலாச்சார ரீதியாக பலப்படுத்துவதன் ஊடாக ஆத்மீகப் பண்புகளை அபிவிருத்தி செய்வதும்.

# இலக்குகள்.

01. ஒவ்வொரு வாழ்வின் எழுச்சிக் குடும்பத்தினையும் வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பு வேலைத்திட்டத்தில் பங்களிப்புச் செய்து கொள்வது.

02. ஒவ்வொருமாதமும் வாழ்வின் எழுச்சி லொத்தர் சீட்டிழுப்பினை நடாத்தி 200 பயனாளிக்குக் குடும்பங்களுக்கு ரூபா. 02 இலட்சம் வீதம் 200 வீடுகளுக்கான பரிசுகளை வழங்கி வருடாந்தம் 2400 குடுபங்களது வீட்டுப்பிரச்சினையினைத் தீர்ப்பதன் ஊடாக பயனாளிக் குடும்பங்களின் நிலையான வீட்டுப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றினை வழங்குதல்.

03. மாதாந்தம் வழங்கப்படுகின்ற 200 வீடுகளை வழங்கியதன் பின்னர் மீதமாகும் ஏதேனும் நிலுவைகள் இருப்பின் அவற்றினை இந்த நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேறுகின்ற விதத்தில் ஈடுபடுத்திக் கொள்வதும் உள்நாட்டு நிதிச் சந்தையில் சிறந்த பயனுள்ள விதத்தில் முதலீடு செய்வதனுடாகக் கிடைக்கின்ற வருமானங்களை மீண்டும் இந்த நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேறுகின்ற விதத்தில் ஈடுபடுத்திக் கொள்வதும்.

# நோக்கங்கள்

01. வாழ்வின் எழுச்சி பயனாளிக் குடுபங்களின் நன்மைகளை அதிகரிக்கும் பொருட்டு அவர்களது வீட்டுப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வொன்றினை வழங்குதல்.

02. வாழ்வின் எழுச்சி பயனாளிக் குடுபங்களின் தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் தொகுதியினை முறைமைப்படுத்தி பராமரித்துக் செல்லல்.

03. வாழ்வின் எழுச்சி பயனாளிக் குடும்பங்களின் நிலையான வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதன் ஊடாக அவர்களை பொருளாதார, சமூக, கல்வி மற்றும் காலாச்சார ரீதியாக பலப்படுத்துவதும் அவர்களது ஆத்மீகப் பண்புகளை மேம்படுத்துவதும்.

04. வெற்றி பெற்ற பயனாளி நிலையான வீடொன்றிக்கு உரிமை கூறும் சந்தர்ப்பங்களில் பயனாளியின் பொருளாதார நிலையினை கட்டியெழுப்பும் பொருட்டு பொருத்தமான கருத்திட்டங்களில் ஈடுபடுத்துதல்.

## வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதிய பிரமாணக் கோவை.

2013 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 45வது பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் மூலம் 1995 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபைக் சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் கீழ் குறிப்பிடப்படுகின்ற பிரமாணக் கருக்கமைய செயற்படுத்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பினை செயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

01. இந்த லொத்தரானது **“வாழ்வின் எழுச்சி / சமுத்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர்”** என்ற பெயரில் இதன் பின்னர் பயன்படுத்தப்படல் வேண்டும்.

02. வாழ்வின் எழுச்சி லொத்தர் சீட்டிழுப்பின் பொருட்டு இலக்கிடப்பட்ட குழுவானது சகல வாழ்வின் எழுச்சி நிவாரணம் பெறும் குடும்பங்களாகும். தற்பொது 3,500/=, 2,500/=,1,500/= மற்றும் 420/= என்ற வகையில் அமைந்த நிவாரணம் பெறும் குடும்பங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றது.

03. 2013ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிக் சட்டத்தின் 45 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வாழ்வின் எழுச்சி வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு தேசிய லொத்தர் சபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04. தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்ற வீடமைப்பு அபிவிருத்தி நிதியமானது உள்ள பிரகாரமே பராமரித்துக் செல்லப்படல் வேண்டும்.

05. வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்புச் சபை மற்றும் தேசிய பேரவையின் தீர்மானம் மற்றும் அங்கீகாரத்திற்குட்பட்டதான நிவாரணங்களின் பெறுமதியிலிருந்து மாதத்திற்கு ரூபா 50/= இற்கான தொகையினை அறவிடவும் தீர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இதுவரையில் பரிசாக வழங்கிய ரூபா 150,000/= இற்கான தொகையானது ஜனவரி மாதத்திலிருந்து ரூபா 200,000/= வரை அதிகரிப்பதுடன் மாதாந்தம் வழங்கப்படுகின்ற பரிசுகளின் எண்ணிக்கையானது 200 வரை அதிகரிக்கப்படல் வேண்டும்.

06. ஒவ்வொரு வீடமைப்பு லொத்தர் வெற்றியாளரும் குறித்த காலத்திற்குள் வாழ்வின் எழுச்சி பயனாளி ஒருவராக இருக்க வேண்டியதுடன் அந்த நிவாரணத் தொகையிலிருந்து 2016 ஜனவரி மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் வீடமைப்பு லொத்தர் பங்களிப்புத் தொகையான ரூபா 50/= ஐ செலுத்தியிருத்தல் வேண்டும்.

07. வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கு சகல பயனாளிக் குடும்பங்களிலிருந்தும் ரூபா 50/= இற்கான தொகையினை ஒவ்வொரு மாதமும் அவர்களின் நிவாரணத் தொகையிலிருந்து கழிப்பனவு செய்து வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் பங்களிப்புத் நிதியாக வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைத்துக் கொள்வது தலைமைக் காரியாலத்தின் கணக்குப் பிரிவின் பிரதம கணக்காளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

08. வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கு வரவாகின்ற தொகையிலிருந்து மாதாந்தம் சீட்டிழுக்கப்படுகின்ற 200 லொத்தர்களுக்கு மேலதிகமாக வாழ்வின் எழுச்சியின் பொருட்டு செல்வாக்கு செலுத்தும் பொருளாதார, சமூக, ஆத்மீக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளின் பொருட்டு வீடமைப்பு அபிவிருத்தி நிதிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்திற்குப்பட்டதாக வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு செலவுகளை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்படுகின்றது.

09. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியத்திற்கு வரவிடப்படுகின்ற தொகையானது இந்த நிதியத்தின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி செலவுகளின் பொருட்டு நிலுவைத் தொகைகள் இருப்பின் அவற்றினை நிதியத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிக்

கொள்ளும் பொருட்டும் நிதியத்தினை விருத்தி செய்து கொள்வதற்கு முதலீடு செய்யும் பொருட்டும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

10. இந்த நிதியம் நிர்வகிக்கப்பட வேண்டியது வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி நிதிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதன் கட்டமைப்பானது 2002 ஜுன் மாதம் 06 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரித்த அமைச்சரவை நிருபத்தின் ஈ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இந்த நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் தலைவராக வாழ்வின் எழுச்சி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரும் பிரிவு ஏனைய அங்கத்தவர்களாக.
    - வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியும்
    - நிதி அமைச்சின் பிரதிநிதி ஒருவரும்
    - வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் சமூக நலன்புரி (நிவாரணம்) பிரிவின் பணிப்பாளர்.
    - சமூக வலுவூட்டல்கள் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சினால் பெயரிடப்பட்ட ஒரு பிரதிநிதியும்.

2005 அம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கமைய

- அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரும்.
- அகில இலங்கைக சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்படல் வேண்டும்.

11. வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி நிதிய நம்பிக்கை பொறுப்புச் சபையின் நிதியத்தின் சகல கிடைப்பனவுகளும் மற்றும் கொடுப்பனவுகளும் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நிதியத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டான சகல தீர்மானங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ள நம்பிக்கைப் பொறுப்புச் சபையால் காலத்திற்கு காலம் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியதுடன் வாழ்வின் எழுச்சி வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்புக்கு மேலதிகமாக அதன் நம்பிக்கை பொறுப்புச் சபை ஊகிக்கின்ற இந்த நிதியத்தின் நோக்கங்களுக்கு ஏற்றதாக கருத்திட்டங்களை அந்த நிதியத்தின் நிதி மற்றும் சட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள முடியும்.

12. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பின் பொருட்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற சபையில் வேலைத்திட்டங்களை வழங்கும் நிறுவணம் ஒன்றின் மூலம் தயாரித்துக் கொள்ளப்பட்ட கணனி வேலைத்திட்டம் ஒன்று சார்ந்ததாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

13. இந்த லொத்தர் சீட்டிழுப்பின் பொருட்டு சகல மாவட்டங்களிலுமுள்ள பயனாளிக் குடும்பங்களின் பிரதான வீட்டுக்குடியிருப்பாளரின் பெயர், முகவரி மற்று தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய முதியோர் அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்கள் உள்ளடங்கிய கணனி தரவுத் தொகுதி ஒன்றினை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பராமரித்துச் செல்லல் வேண்டும்.

14. பயானாளிப் பெயர்ப்பட்டியலை கணனி மயப்படுத்ததும் பொருட்டு கொடுப்பனவு ஒன்று லொத்தர் நம்பிக்கை நிதியச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் எதிர் காலத்தில் வாழ்வின் எழுச்சி வீடமைப்பு லொத்தரை நடாத்திச்

செல்லும் பொருட்டு நேரடியான நிர்வாகச் செலவை லொத்தர் நம்பிக்கை நிதியச் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற அளவு மேற்குறிப்பிட்ட நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அதிகாரமுள்ளது.

15. பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தயாரிக்கப்பட்ட நிவாரணம் பெறுவோரின் விபரங்கள் உள்ளடங்கிய கணனித் தரவுத் தொகுதியினுடாக அந்தந்த பயனாளிக் குடும்பங்களின் பொருட்டு வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் இலக்கம் ஒன்றினை தீடீரென வழங்கப்படல் வேண்டும்.

16. ஒவ்வொரு மாதத்தின் பொருட்டும் மேற்கொள்ளப்படுகின்ற சீட்டிழுப்புக்களின் மூலம் ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் ரூபா 200,000/= வீதம் 200 பரிசுகள் வழங்கப்படல் வேண்டும். இந்த சீட்டிழுப்பு மாதத்திற்கொரு முறை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

17. ஒவ்வொரு சீட்டிழுப்புக்கு முன்னரும் அந்தந்த மாதத்தின் வாழ்வின் எழுச்சி நிவாரண வேலைத்திட்டத்திலிருந்து விலகிய மற்றும் புதிதாக நிவாரணம் பெற்ற பயனாளிகளின் தகவல்களை கணனித்தரவுத் தொகுதியில் உட்படுத்தி முறைமைப்படுத்துதல் வேண்டும்.

18. ஒவ்வொரு சீட்டிழுப்பும் மேற்கொண்டதன் பின்னர் வெற்றி பெற்ற இலக்கங்கள் உள்ளடங்கிய பயனாளிப் பெயர்ப்பட்டியலை பிரதான தொலைக்காட்சி அலைசரிசை ஒன்றின் மூலம் ஒளிபரப்பி ஒவ்வொரு வெற்றி பெற்ற இலக்கத்தினையுடைய பயனாளிகளுக்கும் அறிவிக்கும் பொருட்டு உத்தியோகபூர்வ பெறுபேறுகளை அறிவிக்கப்படல் வேண்டும். இந்த உத்தியோகபூர்வ பெறுபேறுகள் செய்திப் பத்திரிகைகள் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரச்சாரப்படுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறு தகவல்களை முறைமைப்படுத்தும் போது ஏற்படுகின்ற தவறுகளின் பிரகாரம் குறித்த சீட்டிழுப்புக் காலத்திற்குட்பட்ட நிவாரணம் கிடைக்காத ஒருவருக்கு வெற்றிக் கிடைக்கப் பெற்றால் அதன் பொருட்டு அவருக்கு அல்லது அவரது வாழ்க்கைத் துணைக்கு அல்லது தங்கி வாழ்வேருக்கு அந்த விதத்திலும் உரித்துக் கோர முடியாது.

19. வெற்றி பெற்ற பயனாளிகளின் பொருட்டு பிரிசுகளை வழங்கும் பொது பிரதேச செயலாளர்கள் ஊடாக அவர்களது அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் பரிசுத் தொகையினை விடுவித்தல் வேண்டும்.

20. சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், அல்லது பிரிவெளாக்களில் கல்வி பயிலும் பிக்குமார்களாக உள்ள சந்தர்ப்பங்களில் அந்தப் பரிசுத் தொகையினை வெற்றி பெற்ற பயனாளிக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பரிசுத் தொகை வழங்கப்படகின்ற சந்தர்பத்தில் வெற்றிபெற்றபயனாளி இறந்திருந்தால் பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரனையின் பின்னர் இந்த பயனாளியின் சட்டபூர்வமான வாழ்க்கைத் துணைக்கு அல்லது அந்த பயனாளிக் குடும்பத்தில் மிகப் பொருத்தமான தங்கிவாழ்பவர்களுக்கோ (திருமணமாகாத அல்லது இளவயதுப் பிள்ளைகள்) பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

22. தனிநபர் நிவாரணம் பெறும் ஒருவாராயின் அச்சந்தர்பத்தில் அவர் இறக்கும் சந்தர்பத்தில் அதன் பொருட்டு எவருக்கும் உரிமை கோர முடியாது.

23. வழங்கப்படுகின்ற பிரிசுத் தொகை பயனாளி வதியும் வீட்டினைத் திருத்துதல், புதிய வீடொன்றினை நிர்மாணித்தல், காணி ஒன்றினைக் கொள்வனவு செய்தல், நிலையான வீடொன்றிக்கான உரித்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அப்பரிசுத் தொகையினை வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றில் ஈடுபடுத்தும் பொருட்டு என்ற ஒரு பணியின்

பொருட்டு மாத்திரம் ஈடுபடுத்த முடியும் என்பதுடன் இப்பரிசுத் தொகையினை பிறிதொரு பணியின் பயனாளியின் பொருட்டு ஈடுபடுத்துவதாயின் அது தொடர்பில் பரிசு பெற்றவரின் கோரிக்கைக் கேற்ப வாழ்வின் எழுச்சி பிரதேச உத்தியோகத்தர்களின் சிபாசுகளின் கீழ் பிரதேச செயலாளர்களுக்கு தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

அத்துடன்.

I. எவரேனும் வெற்றி பெற்ற நபர் ஒருவர் 60 வருடங்களைத் தாண்டியுள்ள சந்தர்ப்பத்தில் அவரால் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் தொடர்பில் பரீட்சித்துப்பார்த்து பொருத்தமான பிரகாரம் பரிசுத் தொகையினை விடுவித்தல்.

II. வெற்றி பெற்ற பயனாளி அல்லது தங்கி வாழ்பவர் ஒருவர் குணப்படுத்த முடியாத விசேடமான நோய்களுக்குள்ளாகியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது விசேட சத்திர சிகிச்சை ஒன்றினை மேற்கொள்வதற்காக வைத்தியர்கள் சிபாரிசு செய்துள்ள சந்தர்பத்தில் தேவையான வைத்திய சிகிச்சையின் பொருட்டு நிதியை விடுவிக்க முடியும்.

24. பிரதேச செயலாளர்களால் லொத்தரில் வெற்றி பெற்றோரின் அடையாளத்தினை உறுதிப்படுத்தியதன் பின்னர் குறித்த மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்களின கண்காணிப்புக்குட்பட்டதாக பிரிசுகளை விடுவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

25. இதுவரையில் வெற்றிபெற்றோர்களின் பரிசில்களை வழங்கும் அதிகாரம் தலைமைக்காரியாளத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருத்ததுடன் 2014/2015 ஆம் ஆண்டின் சீட்டிழுப்புத் தவணையிலிருந்து மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்களுக்கு பரிசில்களை வழங்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றது.

26. ஒவ்வொரு சீட்டிழுப்பின் இறுதியிலும் அந்த சீட்டிழுப்பினை மேற்கொண்ட தினத்திலிருந்து 03 மாதங்கள் கழியும் வரை மாத்திரம் பரிசுப் பொருட்களை வழங்குதல் வேண்டும். வழங்கத் தவறுகின்ற பரிசில்களுக்கு நிலுவையாகின்ற தொகை அக்கால வரையின் இறுதியில் தலைமைக் காரியாலயத்தின் வீடமைப்பு லொத்தர் நிதியக் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

27. ஒவ்வொரு சீட்டிழுப்பின் போது தேசிய லொத்தர் சபை, கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம், நிதி அமைச்சு. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோன்புகை அமைச்சு, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய உத்தியோகத்தர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றின் முன்னால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

28. ஒவ்வொரு சிட்டிழுப்பின் போதும் கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம், மற்றும் தேசிய லொத்தர் சபை, மற்றும் வாழ்வின் எழுச்சிக் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

29. ஒவ்வொரு சீட்டிழுப்புச் சந்தர்பத்திலும் கண்காணிப்பு குழுகளின் அங்கத்தவர் ஒருவருக்கு ஒரு சீட்டிழுப்புத் தவணைக்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையினர்களால் தீர்மானிக்கப்படு கின்ற தொகை ஒன்று கண்காணிப்புக் குழுக் கொடுப்பணவாக செலுத்த வேண்டும் அக்கொடுப்பனவுகள் காலத்திற்கு காலம் பொருத்தமான பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு அதிகாரமுள்ளது.

30. நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்குத் தேவையான பிரகாரம் காலத்திற்கு காலம் மேற்குறிப்பிட்ட பிரமானங்களை திருத்தஞ் செய்வதற்கு அல்லது புதிய பிரமாணங்களை மேற்கொள்வதற்கு அந்த நம்பிக்கைப பொறுப்புச் சபைக்கு அதிகாரமுள்ளது.